# வடிவங்கள்

(கவிதைத் தொகுப்பு)



கவிஞர்:
நீர்கொழும்பு ந. தருமலிங்கன்

இலக்கியப் பேரவையின்
பரிசீலனைக்காக

# வடிவங்கள்

(கவிதைத் தொகுப்பு)

நீர்கொழும்பு தருமலிங்கம்

கவிஞர்:
நீர்கொழும்பு ந. தருமலிங்கன்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | "வடிவங்கள்"<br>(கவிதைத் தொகுதி) |
| நூலாசிரியர் | : | நீர்கொழும்பு - ந. தருமலிங்கன்<br>195, கடற்கரை வீதி,<br>நீர்கொழும்பு. |
| வெளியிடப்பட்ட திகதி | : | 19-12-1998 |
| அச்சகம் | : | லக்ஷ்மி அச்சகம்<br>195, ஆட்டுப்பட்டித்தெரு,<br>கொழும்பு-13.<br>தொ.பே: 448545, 458273<br>பக்ஸ்: 330588 |
| பதிப்புரிமை | : | நூலாசிரியருக்கே |
| விலை | : | ரூபா 55/= |

# காணிக்கை!

கலை மகளே!
கலைகளின் தாய் கவிதை ஆனதால்;
கம்பன் - வள்ளுவன் - இளங்கோ - கவி
காளிதாசன் வரிசையிலே -
பாரதிக்குப் பின்னாலொரு பரிதியாக
கண்ணதாசன் என்றதொரு தத்துவக்
கவியரசனையும் தந்தது உன் கருணை.

அவனது அழகிய கவிதைச்சுவைகளை
அள்ளிக் குடித்ததனாலும்தான் - உன்கருணையோடு
சின்னக் கவிஞனாகவாவது நானும்
சிறகடிக்கத் தெரிந்துகொண்டேன். உந்தன்
கவிதையெனும் கடலிலே கொஞ்சமேனும் நீந்தக்
கற்றுக் கொண்டேன்.

மனதைக் குளிரவைத்து நான் எழுதிய
மரபுக்கவிதைகள் பலப்பல. ஆனாலும் அவற்றை
மடித்து வைத்துவிட்டு-
அச்சு வடிவங்களாகி வந்தவற்றுள் என்
அகத்தைத் தொட்ட பல
புதுக்கவிதைகளோடு சில ஓசைகளையும் சேர்த்து
புத்தகமாக்கி உன்தாளில் இரண்டாவது
பூவாக்கிப் படைக்கிறேன்.

ஆனாலும் - அடுத்ததாகவெந்தன்
மரபுக்கவிதைகளையே மணியாகக் கோர்த்துன்
மலரடியில் வைப்பேன். அதுவரையில்-
இதுவுமென் காணிக்கை உனக்கு.

# வாழ்த்துரை

கவிதைக்கு உயிர் ஓசைதான் என்பதை ஏற்றுக்கொள்பவன் நான். ஓசை களன் அமைத்துக் கொடுக்க ஆற்றல் வாய்ந்த புலவன் தன் வார்த்தைகளால் உணர்ச்சியைச் சிறைப்பிடிக்கிறான். அக்கவிதைகள் ஏற்படுத்துகிற இன்பமே தலையாய இன்பமாகக் கற்றறிந்தோர் கொள்வர்.

"பொன்னின் சோதி பூவின் நாற்றம் போலிவேபோல்
தென்னுண் தேனின் தீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்"

என்று புலன்களால் பெறும் இன்பங்களில் கவியின்பமே சிறந்த தென்று கம்பன் பாடல் வற்புறுத்திக் கூறுகிறது.

இந்த ஓசை நயத்தைக் கொண்டு நம் புலவர்கள் பல அற்புதங் களை நிகழ்த்திக் காட்டியுள்ளார்கள். ஆற்றல் மிக்க பெரும் கவிஞர் கள் தமது ஓசைத் திறத்தால் அற்புதமான சூழலையே ஏற்படுத்து கிறார்கள் மரபுக்கவிதைகளாக. இது நிற்க:

இன்று பாடுபொருள் ஒன்றினையே பல்வேறு உருவத்தில் படைத்து அதிலே தமது கற்பனைத் திறனைக் காட்ட முற்பட்ட முயற்சியே புதுக்கவிதைகளாக வெளிவருகின்றன. சில புதிய கவிஞர்கள் சிறப்பாக இதில் கவிதைகள் யாத்துப் பெருமைக்குரிய வர்கள் ஆகிறார்கள்.

கவிஞர் நீர்கொழும்பு தருமலிங்கன் இவ்வகையினருள் இரண்டு வகைப் பாடல்களையும் இயற்றவல்லவர்.

அவரது முதல் முயற்சி "பிள்ளைப் பா பூக்கள்" என்ற பெயருடன் வெளிவந்து வெற்றிபெற்றது. அதைத் தொடர்ந்து இன்று "வடிவங்கள்" எனும் இப் புதிய நூல் வெளிவருகிறது.

பல நாளிதழ்களில் வெளியான கவிதைகளைத் தொகுத்து நூலுருவில் கொண்டுவரும் அவரது ஆர்வம் போற்றத்தக்கது. முயற்சி பாராட்டுதற்குரியது.

"நம்பிக்கை மரம்" என்ற அவரது கவிதை பல மனப்படிமங்களை யும், அனுபவங்களையும் கற்போர் மனதில் எழவைக்கிறது.

நேற்றைய
இழப்புகளை யெல்லாம்
எண்ணி எண்ணி
நெக்குருகி

இன்றைய
பொழுதுகளை யெல்லாம்
இரவுகளாக்கி நீயேன்
இடிந்து போகிறாய்?

அழுவதை நிறுத்து!

என்ற வரிகளில் எமது துயர் படிந்த காலங்களின் சுமையும் விடிவை நோக்கிய எதிர்பார்ப்பும் மிக நயத்துடன் பரிணமிக்கின்றன.

ஆங்கிலக் கவிஞன் யீட்ஸ் சொல்வது போல "கவிதை சொற் களில் இல்லை. சொற்களுக்கு இடையில் இருக்கிறது." ("Poetry is not in the words. It is in between the words." -W.B. Yeats)

இக்கூற்றின் உண்மை இவரது பாடல்களில் பரிணமிப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

திரு. தருமலிங்கன் அவர்கள் இன்னும் பல கவிதைகளைப் படைத்து தமிழ் உலகிற்கு வழங்கவேண்டும் என்றும் அவரது முயற்சி கள் வெற்றிபெற வேண்டுமென்றும் இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

இலக்கியச்செம்மல்
செ. குணரத்தினம்

# உள்ளே செல்லுமுன் என்னுரை
# இது முன்னுரை

நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியிலே; எம்
அன்னையின் அயராத முயற்சி ஈந்த கல்வியையும்
ஆசிரியப் பெருமக்கள் கற்றுத்தந்த தமிழையும் மறக்காமல்
இவர் அனைவர்தம் தாள்களில் எந்தன் - தலைபட
வணங்கி நம் தமிழ்வழி தொடர்கிறேன்.

வயது பன்னிரெண்டு. இந்த வயதில்தான்
கவிதாதேவி என்னுடன் கலந்துகொண்டாள்.
கவிதைவடிவங்களிலே மனதில் உறிவந்த
கருத்துக்களைக் கூறக் கற்றுத் தந்தாள்.

நீர்கொழும்பூர் முத்துலிங்கம் - மு. பஷீர் - லெ. முருகபூபதி
செ. செல்வரத்தினம் - பொ. சந்திரமோகன் போன்ற
இலக்கியச் சிந்தனைகள் கொண்ட இனியதோழமைகள்
இலக்கியக் களத்தில் என்னை ஊக்குவித்தன.

காந்தன் குருக்கள் - கம்பவாரிதி இ. ஜெயராஜ் - சோமகாந்தன்
மரியசேவியார் அடிகள் - டொமினிக்ஜீவா போன்ற
கலைத்துவம் மிக்க இலக்கியப் பெரியோர்களுடன் ஆன
கனத்த - இதமான கருத்துப் பரிமாறல்களும்
ஆ. கந்தசாமி - செ. மாணிக்கவாசகர் போன்ற இனியவர்களது
ஊக்கம்தரும் வார்த்தைகளும்
புத்தகவடிவில் என் ஆக்கங்களைக் கொண்டுவரப்
புத்தூக்கம் தந்தன. அதன் பிரதிபலிப்பே - இந்த
"வடிவங்கள்" என்ற எனது இரண்டாவது நூலின் வருகை.

மனக்கதவைத் தட்டிநின்ற மனிதவாழ்வின் சமகால வடிவங்களை,
வக்கிரங்களை - எழுச்சிகளை, வீழ்ச்சிகளை
என்பாணியிலேயே எடுத்துச்சொல்ல முயன்றிருக்கிறேன்.

இந்தக் கவிதைகளுக்குளெல்லாம் ஒருவித
இனம்புரியாத சோகமும் - மன உளைச்சல்களும்
ஊடறுத்து நிற்பதை நான் உணர்கிறேன். ஆனாலும்;

இது - காலம் விதித்துவிட்ட கட்டாயம். மீண்டும் -
காலதேவனின் கட்டளையாக களிப்பு நிறைந்த
காலமொன்றை நம் சந்ததிகள் நிச்சயமாய் சந்திக்கும்.
அப்போது - நாம் கடந்து வந்துவிட்ட காலத்தின்
அவலங்களை, சோகங்களை, துயரங்களை - அந்தச்
சந்ததிக்குச் சொல்லப்போகும் சாட்சிகளாகவும்,
தடயங்களாகவும் இவை இருக்குமெனில் சந்தோசம்.

உள்ளத்தில் ஊறுகின்ற எண்ணத்தின் வடிவங்களை
உருவம் குலையாமலே எடுத்துச் சொல்லவென்றே
இலக்கணக் கட்டுக்களையும் உடைத்துக்கொண்டு
புதுக்கவிதை என்றதொரு புதுவடிவம்
புதுக்க விதைக்கப்பட்டது. இதன்பெயரால்
புரியாத சொற்களைப் பூட்டி வித்துவங்கள் காட்ட
விருப்பமில்லை. அது எனக்கு உடன்பாடுமில்லை. அதனால்
ஓசை நயத்தோடு சேரும் இலகுவான சொற்களையே கவிதை
வடிவங்களாக்கி உங்களுடன் கலக்க விட்டிருக்கிறேன்.

பல கவிதைகளின் பிரசுரத் திகதிகளைப் பொறித்துவைக்கத்
தவறிய என் பிழையினால் - தங்கள்
பக்கங்களில் பங்குதந்த பத்திரிகைகளின் பெயர்களை மட்டுமே
பதிக்கச் செய்திருக்கிறேன்.
பத்தாண்டுகளுக்கும் முன்னால் பிரசுரமான ஒருசில கவிதைகளும்,
புதிதாக எழுதி அச்சுக்குள் அகப்படாத சில கவிதைகளும்
இந்நூலில் இணைந்துள்ளன.

கவிதைகள் உங்களையும் களிப்புறச் செய்யும்
என்ற நம்பிக்கையுடன் - வாழ்த்துரை வழங்கியுள்ள
இலக்கியச்செம்மல் திரு. செ. குணரத்தினம் ஐயா அவர்கட்கும்;
அழகான முறையில் அச்சிட்டுத்தந்த அச்சகத்தார்
திரு. வே. திருநீலகண்டன் - மற்றும்
அன்புடன் ஆதரவுதர எண்ணும் அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் என் ஆழ்ந்த நன்றிகளைக் கூறிக்கொண்டு,

அன்புடன்
ந. தருமலிங்கன்

# வாழ்க்கை வாழ்த்தும்!

மனிதனே!..... இந்த
மாய வாழ்க்கை
மண்ணுக்குள் புதையுமுன்னே
நீயும் வாழ்ந்திருக்கிறாய் என்று
உன்
ஆத்மாவாவது ஓர்நாள்
ஆறுதல் கொள்ளவேண்டாமா?
*

காலவெள்ளம்.....
உப்புக் கரிக்கும் உன்மேனியை
சப்பிக் கரைத்து
துப்பிவிடத்தான் போகிறது ஒருநாள்
சக்கையாக.

கிழித்து எறிந்த
கோவணத் துண்டுபோல்
அப்போது சாவதிலும்
இப்போதே செத்து விடலாம்.
ஆதலால் -
மரணத்தை நீ முந்து!
*

மனிதனாகப் பிறந்ததற்கு நீயொன்றும்
மணலைத் திரித்துக்
கயிறாக்க வேண்டாம்.
திரித்த திரியிலே சிறு
தீபத்தையாவது ஏற்றிவிடு!

வாழ்க்கை உன்னை வாழ்த்தும்!
***

*தினக்குரல்*
*06-07-1997*

# நம்பிக்கை மரம்

நேற்றைய
இழப்புக்களை யெல்லாம்
எண்ணி – எண்ணி
நெக்குருகி

இன்றைய
பொழுதுகளை யெல்லாம்
இரவுகளாக்கி நீயேன்
இடிந்து போகிறாய்?

*

உன்
கனவுகள் கூடக்
கண்ணீரிலேயே உன்னைக்
கரைப்பது ஏன்?
அழுவதை நிறுத்து!

ஆண்டவன் போட்ட தோட்டத்திலே
எங்கோ ஒரு மூலையில்
உன் கைபட்டுக் கூடப்
பூத்துக் குலுங்கக்
காத்துக் கிடக்கும் ஒரு
பூ மரம்.

*

புறப்படு!
அதைத் தேடி
உடனே புறப்படு!

***

*கலைமுகம்*

# இலங்கை மண்

குருதியைக்
குடித்துக் குடித்து
இறுகிச் சிவக்கிறது
எங்கள் இலங்கை மண்.

*

இப்படியே போனால்
சிவப்புத் தழும்புகளை
இதயங்களாகக் கொண்டுதான்
இனங்களெல்லாம்
ஈனங்களாய்ப் பிறப்பெடுக்கும்.
இவர்களுக்கு
இதயங்கள் இருக்கும்.
அதிலே
ஈரம்தான் இருக்காது.

*

இவர்களும்-
"மனித இனத்தின்
கூறுகளாக இருக்கலாம்"
என்று-
ஒருகாலத்தில்
பௌதீகவியல் பாடம் நடத்தும்.

*

கல்விமான்களே!
மானுட மேன்மைக்காக
மணிக் கணக்காய் பேசுகின்ற
மாமேதைகளே!
நிஜத்தின் கடுமையை
நினையுங்கள்!

குறுகிய
இனவெறிக் குப்பைகளை
கூட்டிக் குவித்துக்
கொளுத்துங்கள்!

*

தவறினால்.......

ஆவிகளாய் அலையப்போகும்
இந்த
மண்ணின் ஆத்மாக்கள்

உங்கள்
நினைவுகளைக் கூடத்
தேடிப் பிடித்து - ஒருநாள்
நெருப்பிலிட்டுக் கொளுத்தும்.

***

*வீரகேசரி*

# விளைவு!

மனித மனங்களை
பதம் செய்யவென்றே படைக்கப்பட்ட
மதமே! உன்பெயரால்
வதம் செய்துகொள்ளும் வெறிகளையுமேன்
வளர்த்து விடுகிறாய்?
அதனால்தான்–
"நெறி"யென்றும் – "வெறி"யென்றும்
எதிர்மறையாய் பொருள்கூறும்
மதம்
என்று அழைத்தனரோ முன்னவர்கள்!?

*

உன்னில்–
"மதம்" கொண்டவரின்
மார்க்க இசத்தைத் தகர்ப்பதற்காக–
மார்க்ஸிசம் என்றதொரு
அங்குசத்தைத் தூக்கிக் கொண்டு
அறிவுலகம் புறப்பட்டது அன்று.
ஆனாலும் என்ன – உன்
அசுரப்பசிக்கு முன்னால்
அங்குசங்கள்கூட தங்கள்
அடையாளங்களைத் தொலைத்துவிட்டு
அழுகின்றன!
அதன் விளைவுதான்....

மானுடத்தை மானுடமே
மாய்த்துக்கொள்ளும் அவலங்கள்!

***

*தினக்குரல்*
*19–07–1998*

# இன்னுமே உன்னைக் காணவில்லை!

ஓ....... சுதந்திரமே!
ஆண்டுக்கு ஒருமுறை நீயும்வந்து
உன்னை
அடையாளம் காட்டிவிட்டுத்தான்
போகிறாய்.
ஆனாலும் என்ன
நாங்கள்தான்-

இன்னுமே உன்னை
ஒருநாளும் காணவில்லை.
*

முடவன் நடந்து சென்றதை
குருடன் கண்டதாய்
ஊமையன் சொல்ல - அதை
செவிடன் கேட்ட கதையாக

நாங்கள்தான்-
இன்னுமே உன்னை
ஒருநாளும் காணவில்லை.
***

*வீரகேசரி*

# இனியாவது தெரிந்து கொள்வோம்!

சாதிபல உருவாக்கி
எத்தனை
சண்டித் தனங்களையெல்லாம்
சட்டமாக்கித்
தடித்திருந்தோம்!
*

இன்று..........
உலகமெல்லாம் எம்மை
மொத்தமாகச் சேர்த்து
முடிசூட்டி வைத்த பெயர்
"அகதிகள்".

ஒற்றைச் சாதியாய்
நாம்
உ...ய...ர்...ந்...து நிற்பது
இப்பொழுது தானடா!
*

'நக்கல்' என்று
நினைத்து விடாதே
நண்பனே!

"பேதம்" – என்ற ரணம்
எத்தனை
வேதனை தரும் என்பதை
இனியாவது
தெரிந்து கொள்வோம்!
***

*தினமுரசு*
*24–03–1998*

# மாற்று விதை

தழை காட்டும் பக்கமெல்லாம்
தலையாட்டிச் செல்கின்ற ஆடுகளாய் நம்
தமிழினம்.

*

ஒரு கட்சி – ஒரு கொள்கை – ஒரு இனம்
என்ற உணர்வை இழந்து
இன்னும் – இன்றும் இழிகிறது.
அதனால்தான்–

தோளிலே துவக்கும்
தொண்டைக் குழியருகே
மரணத்தைக் கடித்து விழுங்குகின்ற
மனோவெறியுங் கொண்டு
வாழ்க்கையைத் தேடுகிறது ஒரு
வரலாறு. அங்கே.

நாளைய வாழ்வுக்காய்
இன்றையை இழக்கிறது நம் தலைமுறை

*

என்றாவது ஒருநாள்
உரிமையுள்ள இனமாக நாம்
உலாவர வேண்டுமா? ஒற்றுமையெனும்
உரம்போட்டு
உள்ளங்களைத் திருத்துவோம்!

மண்ணைத் திருத்தாமல்
மாற்றுவிதை போட்டு என்னபயன்?
***

*வீரகேசரி*

*22–07–1998*

# நீதிமரத்தின் கீழே.......

மனச்சாட்சி செத்தநாட்டில்
மானுடமே
பேயினமாய் மாறிப்போமோ......
இல்லையெனில்-

பாலியல் வல் - உறவுகளால்
பெண்மையைப்
பிய்த்துத் தின்கின்ற
பிசாசுகளும்
எப்படிப் பிறக்கும் இங்கே.....?
*

ஓ.... இலங்கை மாதாவே!
உன்னை-
தேவர்கள் இப்போது
தீண்டுவதே இல்லையோ.......?

உன் மண் வயிற்றிலே
பிணந் தின்னுகின்ற பேய்மைகள்,
புன்மைகள் அல்லவா
பிறப்பெடுத்து-
வெறிபிடித்து........ சீ........
*

போதி மரத்தின் கீழே
புத்தன் நிர்வாணமாய் நின்று
ஞானம் போதிக்கும் நாட்டிலே

நீதி மரத்தின் கீழே
நீ......
நிர்வாணமாகி நிற்கிறாய். இந்த
நீசர்களைப் பெற்றதற்காக!
***

*வீரகேசரி*
*03-08-1997*

# தணிக்கை செய்–தீ

வாய்களை
மூடிக் கொண்டோம்!
கண்களைப்
பொத்திக் கொண்டோம்!
செவிகளை
அடைத்துக் கொண்டோம்!

*

ஆனாலும் –
இந்த மனத்தை
எப்படித்தான் மடக்கி வைப்பது?
ஆகாயத்தை அல்லவா
அது அளந்துவிட ஆசைப்படுகிறது.

*

அட மூட மானுடமே!
நீ
மனங்களின் சாட்சிகளை
மறைத்துவிட முயல்வதனால்
பிணங்களை அல்லவா
சாட்சிகளாக்கிப்
பேசவைத்து விடுகிறாய்!

* * *

*தினக்குரல்*
*12–07–1997*

# போர்வையொன்று வேண்டிவா.... போதும்!

புதியதோர் விடியலின் கனவுகளாய்
பூபாளம் இசைக்கப்புறப்பட்ட
புத்தாண்டே வருக!
*

உனக்கென்ன.....
பன்னிரண்டு மாதங்கள்
பருவத்தேர் பவனி வந்து
எண்ணிரண்டு வயதைப்போல்
எழில்காட்டிப் புலர்ந்து விட்டாய்.

உனக்காக
கண்களிலே பூக்கோர்த்துக் காத்திருக்கும்
கனவுகள் மட்டுமா?...... இல்லை.
புண்களிலே தீபட்ட வேதனையாய்த் துடித்து
கண்களிலே நீர் வார்த்துக் காத்திருக்கிறோம்
"அகதிகள்" என்னும் அவலங்களாக.
*

புத்தெழிலாய் வருவாய்.
புதுவாழ்வு தருவாயென்று
எத்தனை காலங்கள் ஓடிமறைந்தனபார்!
புதிதாக இன்னும்
என்னதான் சொல்லிக் கொண்டு
ஏமாற்ற வந்திருக்கிறாய்?

தமிழர்கள் வாழ்விலே தடுக்கியே வீழ்ந்து
தறிகெட்டு நிற்பதைத்
தடுக்கவா வருகிறாய்?

புத்தனின் நெறிகளை பொய்மையில் புதைத்து
யுத்தங்கள் தொடர்வதை
நிறுத்தவா வருகிறாய்?

சாந்தி - சமாதானம் - சகவாழ்வு என்று
வீணான கனவுகளை ஏனின்னும்
விதைக்கிறாய்?
*

புத்தாண்டே...... நீ அறிவாயா?
இந்த மண்ணிலே

பசித்தழும் பிள்ளைகட்குப் பசிதீர்க்க
வழியின்றி
கண்ணீரை உணவாக்கிக்
கலங்கியே தவிக்கிறது நம் தமிழினம்.

கட்டிய ஆடைகளையும் கழற்றித்தான்
காட்டுக்குள்ளே
கொட்டில் போட்டுக் கொண்டு
குமுறி அழுகிறது அது.

தொட்டில் கட்டிக் குழந்தையை
தூங்கவைக்க வழியின்றி
கொட்டும் பனி மழைக்குள்
குடங்கியே மரணிக்கிறது.
*

புத்தாண்டே....! நீ வரும்போது-
பொன்பொருள் எதுவும் வேண்டாம்.
குளிர்தாங்க முடியவில்லை.
முடிந்தால்-
போர்வையொன்று வேண்டிவா போதும்.
***

*வீரகேசரி*

*01-01-1996*

# இன்று வரை...

தீபத் திருநாளே! எங்கள்–

சந்ததிகளின் சரித்திரபாடத்தில் – இத்தனை
சாட்சிகளைப் பதித்தபின்னும்
சாம்பல் பூத்து நிற்கிறாயே...
சரிதானா?

*

இந்த மண்ணில்–
வெடித்துச் சிதறுபவை குண்டுகளா?
இல்லை.
மரணித்துக் கொண்டிருக்கும்
மானுட தர்மத்தின்
மகத்துவங்கள்!

*

மடிந்து சரிபவர்கள் மனிதர்களா?
இல்லை.
சாந்தி – சமாதானம் – சகோதரத்துவம்
என்கின்ற
மானுட விழுமியங்களின்
மகோன்னதங்கள்!

*

மண்ணை நனைப்பது மானுடரத்தமா?
இல்லை
மண்மாதா சிந்துகின்ற
மனக்கண்ணீர்!

ஆனாலும்–
கண்ணீரின் கனங்களைவிட
காலங்களின் கனைப்பே – இந்தமண்ணில்
"கௌரவம்" என்ற வெற்றுக்
கவசங்களின் மறைப்பில்
காலூன்றி நிற்கிறது.

*

பதவிகளின் வார்த்தைப் பொறிகளும் உன்
தீ நாக்குத்தேடும் தீனிகளையே
தினம் தினம்
தந்து கொண்டிருக்கிறது. நாங்கள்
வெந்து கொண்டிருக்கிறோம்.
"விதியே" என்று
வருடா வருடம் நீயும்
வந்து கொண்டுதானிருக்கிறாய்.

*

ஆனால்–
"தீபத் திருநாள் வந்தது
தீமைகள் மண்ணில் அழிந்திட" என்று
கவிக்குலத்தார் தீட்டுகின்ற
கவிதை வரிகள்தான் பாவம்!

ஏட்டுச் சுரைக்காயாய் –
உயிரிழந்து அழுகின்றன
இன்றுவரை.

***

*வீரகேசரி*
*30–10–1997*

# "பொங்கும் மங்களம் எங்கும் தங்கிட"

# பொங்கலென்ன.... போர் நிறுத்தமா?

மார்கழியில் நீராடி
மாண்புடனே தமிழ்பாடி
கார்கழிக்கும் ஆதவனின்
கரம்பிடித்து விளையாடி
தார்களிக்க ஒளியாடி
தைமகளும் வருவாள்.
போர்கழித்து எம்வாழ்வில்
புதுவாழ்வு தருவாள் என்று-

பத்துத் தைக்குமேலாய்
பாவப்பட்ட தமிழ்மக்கள்
காத்திருந்த தை- விழிகள்
பூத்திருந்த தை- எதிர்
பார்த்திருந்த தையே! இன்னுமா நீ
புரிந்து கொள்ளவில்லை?

*

ஏர்முகத்தை ஏற்றிவைத்து
சீர்முகத்தை காணவென்று
தார்முகத்தை தழுவிடவே
தவித்துநின்ற மனங்களிலே
போர்முகத்தை காட்டித்தானே
புலருகின்றாய் இதுவரையில்....?

மதிமுட்டி நின்றவாழ்வில்
விதிமுட்டி நின்றதாலே
பதிவிட்டு நிதிகெட்டு

பரிதவிக்கும் வேதனையில்
ஆண்டிகளாய் அகதிகளாய்
அழுகின்ற தமிழ்க்குரல்கள்
அகிலமெலாம் கேட்குது பார்!

கத்துகடல் முத்திறைக்கக்
கவிபாடும் இலங்கைத்தீவு
ரத்தத்தில் குளித்து இன்று
ரணகளமாய் ஆவதைப்பார்!
இந்நிலையில்–

பொங்கல் வந்ததென்று
பூரித்துப் புகழ்பாட
பொங்கலே நீயென்ன
போர்நிறுத்தமா? இல்லையே!

*

யாழ்மக்கள் ஆனாலும்
யார்மக்கள் ஆனாலும்
ஓர்மக்கள் இந்நாட்டின்
உரிமையுள்ள மக்கள் என்ற
உதயகீதம் பாடிக்கொண்டு–
பொங்கலே நீ மீண்டும்
பொலிவுடனே வருவாயானால்.....

அந்தநாள் வரும்போது
ஆயிரமாய் பாடல்கோடி
உந்தன்மேல் பாடிடவே
உனைத்தேடி நான் வருவேன்.

***

*நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தின் 18–01–1997 அன்றைய பொங்கல்விழா கவியரங்கில் பாடப்பட்ட கவிதையின் சுருக்கம்.*

# அவர்கள் தயாராக வேண்டும்!

அன்பான பெரியவர்களே!
வையத்து மனிதன்
வானத்து நிலவை
கையில் பிடித்துக்கொண்டு
செவ்வாயை நோக்கிச்
செல்லத் தொடங்கி விட்டான்.

காலம் கூட- தன் தேவைகளை
கணணிகளால் கணித்துக் கொண்டு
காற்றாய்ப் பறக்கிறது.

*

நாங்களோ-
சாபங்கள் போலவே
சாதிகள் படைத்து
சாதியின் பெயரால்
சண்டைகள் பிடித்து
சாவதுதான் எங்கள்
சந்ததிக்கும் தலைவிதி என்றாக்கிச்
சரிந்து கொண்டிருக்கிறோம்.

*

"சாத்திரம் பார்த்துத்தான் எங்கள்
சட்டிகளும் அடுப்பிலேறும்.
கோத்திரம் பார்த்துத்தான் எங்கள்
கோயில்களும் தாள் திறக்கும்"

என்று வாழ்ந்து- நாங்கள்
என்னதான் சாதித்து விட்டோம்?
இப்படியே போனால்-
எங்கள்
சந்ததிகள் சந்திக்கப் போவதும்
சாந்தி நிறைந்த உலகத்தை அல்ல.
சாபக்கேடு நிறைந்ததொரு
சரித்திரத்தைத் தான்.

*

அதைத்
தாங்கிக் கொள்ளவும்,
தாண்டிச் செல்லவும் அவர்கள்
தயாராக வேண்டும்.
தயவுசெய்து-

முடிந்தால்
வழிகாட்டுங்கள்! இல்லையேல்
வழிவிடுங்கள்!

***

*தினகரன்*
*05-12-1998*

# நரகம் பெரிதில்லை

வாட்டும் வறுமை-
வாலிபம் வதைபடத்
தேட்டிய செல்வமும்
சீர்தரா வாழ்க்கை.
ஊட்டிய உடலைக் கருக்கி
உலைக்கின்ற நோய்கள்-
இவைகள்
காட்டிடும் கவலையிற்
பெரிதோ நரகம்.......?

*

நன்றி மறப்பவர்-
நற்குடி கெடுப்பவர்-
நன்மைகள் மறந்து
தீயவுரைப்பவர்-
ஒன்றிருக்கையில்
அவர்களின் நடுவே
ஒடுங்கியே வாழ்வதை
ஒக்குமோ நரகம்?

*

இதயங்கள் இணையாத இல்லறம்.
பிள்ளைகள்-
இருந்தும் உதவிடா வயோதிபம். சக

உதிரத்துச் சோதரர்
உறுந்துன்பம்- இவற்றினால்
உயிர்நோகும் வேதனைபோல்
இருக்குமோ நரகம்?

*

அகதியாய் தாய்மண்ணில்
அலைகின்ற சோகம்.
ஆற்றொணாத் துயர்பட்டு
அழுகின்ற சோகம்.
வன்மனமாந்தர் வார்த்திடும் யுத்தம்
வகுத்திடும் துயரிலும்
வருத்துமோ நரகம்.....?

*

ஆண்டவா!
இந்த அவனியில் வாழும்
அவலத்துட் பெரிதாம்
நரகமொன் றில்லை.
மாண்டபின் எதுவரும்
எங்குயிர் போகும்
என்றெண்ணிக் களைத்திட
இனித் தேவையில்லை.

***

*வீரகேசரி*
*06-12-1998*

# மனச்சுமை மடல்

கலை முகமே!
கடந்துபோன சித்திரையில்

உன் இதழ்கள் சிந்திய
ஒவ்வொரு எழுத்துக்களையும்
தொட்டுச் சுவைத்துப் பார்த்தேன்.
அவைகள் கூட
உப்புக் கரித்ததே... ஏன்?

தமிழர்களின்
கண்ணீராலேயே எழுதப்பட்டிருந்த
காரணத்தினாலா?

புலம் பெயர்ந்து போகும்போதே
மனிதன்
பலமும் பெயர்ந்துதான் போகிறானா?

*

கனவுகளுக்குப் பஞ்சனை விரித்து
கண்களிலே காவித்திரிந்து
காத்துக் கிடந்து-
வாழ்க்கையைத் தேடி
ஓடிய இடங்கள் கூட - மனங்களை
வலியெடுக்க வைக்கிறதா?

சொந்த மண்ணில்
மதிமுட்டிச் சிறந்த வாழ்வில்

விதிமுட்டிச் சிரித்ததாலே-
ரத்தச்
செந்நீரைக் கரைத்து
சேர்த்த பணத்தைக் கொட்டி
கண்ணீரில் கரைந்து போகத்தான்
இங்கிருந்து
கலைந்து போகிறார்களா?

*

மனமே மனிதனுக்குச்
சுமையாகிப் போனால்-

சொந்தமண் மட்டுமல்ல
எந்தமண்ணுமே அவனுக்கு
சுமையாய்த்தான் மாறும். எனவே-

வேதன் வகுத்த வாழ்வில்
வேதனைகள் கலக்காத வீதிகளும்
விதிகளும்
எங்குமே இல்லை என்பதை
அவர்களுக்குக் கூறி,

வசந்தங்களைத் தேடி
தொடுவதற்கு முன்னால்
வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு
வருந்தாதீர்கள்!
என்பதையும்
எடுத்துச் சொல்வாயா?....

***

*கலைமுகம்*

# கோடுகள்-கோலங்கள்!

"கோடுகள்" - இவை
கோதையரின் கைகள் பட்டுக்
கோலங்களாய் சிரிக்கிறது.
காவியங்கள் வடிவெடுத்துக்
காலமெல்லாம் மணக்கிறது.
ஓவியர்தம் விரல் அசைவில்
உயிராகி நிலைக்கிறது

*

வாழ்க்கைப் பாதையிலே—
சறுக்கிப் போனவரின் விரக்தியிலே
கிறுக்கல்களாகி
குறுகியுந்தான் போகிறது.
அது-படைத்தவனின் குற்றமல்ல.
அவன் தந்த
பகுத்தறிவின் திறன் அறியாப்
பாமரத்தின் குற்றம்.

*

பாதையிலே முள்ளிருக்கும்.
பார்த்துத்தான் நடக்க வேண்டும்.
தீபத்தில் வழி தெரியும்.
தொட்டுப்பார்! சுட்டுவிடும்!
பாதியிலும் பதில்கள் வரும்.
வாழ்க்கையெனில் பலதும் வரும்.
ஆதிமுதல் மனித வாழ்வின்
சேதியிது நினையாமல்
ஆண்டவனே என்றழுதால்
அவனுந்தான் என்ன செய்ய...?

***

*கலைமுகம்*

# தேடலின் துயரங்கள்!

இல்லாத ஒன்றுக்காய்(த்)
தானிந்த மானிடம்
ஏக்கத்தை வளர்த்துத்
தூக்கத்தை கெடுத்துக் கொள்கிறது.
அது மனித நேயம்!

*

வளர்க்காத ஒன்றுக்காய்(த்)
தானிந்த மானிடம்
பதில்களை எல்லாம்
கேள்விகள் ஆக்கிப் பரிதவிக்கிறது.
அது இனஒற்றுமை!

*

சேர்க்காத ஒன்றுக்காய்(த்)
தானிந்த மானிடம்
சோகத்தைக் காட்டிச்
சொர்க்கத்தை விலைபேசுகிறது.
அது சமாதானம்!

*

கிடைக்காத ஒன்றுக்காய்(த்)
தானிந்த மானிடம்
மழுங்கிய மனங்களால்
மாதவம் செய்து மாள்கிறது.
அது நிம்மதி!
நிம்மதி!!
நிம்மதி!!!

***

*கலைமுகம்*

# மனதுக்குள் ஒரு கலக்கம்

"இருபதாம் நூற்றாண்டின்பின்
உலகம் அழியுமாம்"

விஞ்ஞானத்தின் விரிவில்-

கடவுள்கூட எங்கள்
கைக்கெட்டும் தூரத்தில்.
அப்படியிருக்க -
எப்படி.... இப்படி
ஒரு
செப்படிவித்தை நடக்கும்?
செருக்குடன் சிந்திக்கிறேன்.
நான்
மனிதன் அல்லவா....!

*

ஆனாலும்-
ஆறாம் அறிவின் அயராத
முயற்சியும்
முதிர்ச்சியும்

மானுட மகத்துவத்தை
மலையுச்சியில் செதுக்கிய

மணிமுடிபோல் வைக்கும் என்ற
மனக் கனவுகளை யெல்லாம்
மண்கவ்வச் செய்துகொண்டு
இதோ
அணுகுண்டுப் பிசாசுகளின்
அவசரப் பிரசவங்களும்
ஆயுதப் பேய்களின்
ஆவேச நர்த்தனங்களும்.

*

இவைகள்
மானுட விழுமியங்களையே
மரணிக்கச் செய்துவிடும்
மகோன்னதங்களாக
மார்தட்டிக் கொள்ளும்போது
மானுடம் மட்டுமா.....? இந்த
மண்ணுலகமே
மரணக் குழிக்குள் என்றோ
மரிக்கத் தொடங்கிவிட்டதோ....?

மனதுக்குள் ஒரு கலக்கம்.

***

*தினகரன்*

*24–10–1998*

# எயிட்ஸே வாழ்த்துகிறேன்!

எயிட்ஸே!
உன்னைக்கூட வாழ்த்தி
ஒரு கவிதைபாட எனக்குள்ளே
சின்னதொரு ஆசை.

*

"ஒருவனுக்கு ஒருத்தி" என்ற
இயற்கையின் உட்பொருளை
இப்பொழுதுதான் - உலகம்
உணரத் தொடங்கியிருக்கிறது.
அதுவும்.... உன்னால்!

உனக்குத் தெரியுமா?
மேலை நாடுகளில்
கணவன் மனைவிகூட
கட்டிலறையில் நின்று
கன....க்.....க யோசிக்கிறார்களாம்.

*

உன்னை அழித்துவிட இவர்கள்
ஆலாய்ப் பறப்பது
மானுடத்தை ரட்சிக்கவா.....?
இல்லை.

பாலுணர்வின்
வக்கிர வடிவங்களுக்கு வடிகால் தேடி
ஆட்டம் போடமுடியாதா.... என்ற
அங்கலாய்ப்பில்தான்.

***

*தினக்குரல்*
*16–11–1997*

# தீயின் தொடுகைகள்

சிறுவர்கள்–
தேசத்தின் சொத்துக்கள்!

இவர்கள்
அரும்பாகி மலரும் போதே கசக்கி
அசிங்கப் படுத்தப் படுவது
அநியாயம்.

*

வட்டத்தின் ஆரம்பம் சுற்றி வந்து
தொடக்கத்தையே
தொட்டுக் கொள்வதுபோல்
சிறுவர் விபச்சாரத் தீ.... சுழல்கிறது.

இந்த சின்ன உடல்களிலே
தேக வக்கிரங்கள் தீர்க்கப்படுகின்றன.
அதனால்–
தேசவக்கிரங்கள் தொடக்கப் படுகின்றன.

–தீயின் தொடுகைகள் போல்–

*

இந்தப் பிஞ்சுகளைக் காப்பாற்ற
பெற்றவர்களே! தேசத்தின்
பெரியவர்களே!
உங்கள் பொறுப்பை உணர்ந்து
ஏதாவது செய்யுங்கள்.... இப்பொழுதே!

இல்லையெனில்
தேசம் – நாசம்.

***

# விலைகள்

மண்ணுக்கு உரம்போட
மாட்டெருவைக் கூட
விலை கொடுத்துத்தான் மனிதன்
வெளியே வாங்குகிறான்.

*

வேண்டாத குப்பையென்று
வீசுகின்ற பொருள்கள்கூட
விலைபெற்றுக் கொண்டுதான்
சிலவேளை
வெளியேயும் கிடைக்கிறது.
ஆனாலும்–

திருமணச் சந்தையிலே–
விலைகொடுத்து விலைகொடுத்து
"விற்கப்படுபவள் பெண்" என்ற
வித்தியாசமான தொரு
வியாபாரமும்
விதிவிலக்கும்
வேதனையைத்தான் தரவில்லை!
வெட்கத்தையுமா தரவில்லை!

*

சமூகமே!
தீபமென்றும் தெய்வமென்றும்

தியாகச் சுடர்கள் என்றும்
தித்திப்பாகப் பேசிக்கொண்டே
பெண்மையை
"சீதனம்" என்ற தீவிலங்கிட்டு
சிறைவைத்து விடுகின்ற உன்
சுயநலத்தை எண்ணி
சிரிப்பதா? அழுவதா....?
*

சமூகம் என்ற சாத்திரத்தில்
சரிபாதி பெண் என்பது- படைப்பின்
சமாந்தரம்.
சரி அதைத்தான் விடு!

வாழ்க்கை என்ற சத்தியத்தில்-
வாலிபத்தில் மட்டுமல்ல
வயோதிபத்தின் வாசல் மூடும்வரை-
எந்தவடிவத்திலேனும் சரி....
வழித்துணையாய் அவளின்றி
வாழ்ந்துவிட முடியுமா...?
*

பின் எதற்காக.......
இந்த
வாழ்க்கைக்கு விலைபேசும்
வக்கிரங்கள்?
***

# தாய்க்குப் பின் தாரம்!

தன்னையொரு-
பெண் என்று மட்டுமே எண்ணிப்
பேசிக் கொண்டிருந்த வரை
மணவாழ்வில் ஒரு
மனிதனை மட்டுமே கண்டாள்.

*

சதைகளின் சங்கமத்திலேயே
தாம்பத்தியம் தழைத்து விடும் என்று
ஏமாறுகின்ற தொரு
மனைவியாக மட்டும் வாழ்ந்தவரை-
கணவன் என்ற வடிவத்தின்
கடமைகளை மறக்காத
ஆடவன் ஒருவனைத்தான் உணர்ந்தாள்.

*

அன்பையும் கருணையையும்
அள்ளிப் பூக்கின்றதொரு தாயாகவும்
அவனைத் தழுவிக் கொண்ட போதுதான்

பத்துப் பிள்ளைகளைப்
பெற்றெடுத்த பின்னுங்கூட
பதினோராவது குழந்தையாக- தன்மடியில்
படுத்துறங்கத் தவித்த
அன்புக் கணவனை அவள்
அறிந்து கொண்டாள்.

"தாய்க்குப் பின் தாரம்" தான்.
தத்துவம் அவளுக்கும் புரிந்தது.

***

# தேடியதும் தொலைத்ததும்

ஏழ்மையில் பிறந்தேன்
அந்த
ஏழ்மையை ஏழ்மையாக்கி
வாழ்வினைச் சுகமாய் ஆக்க
வாடி வதங்கி உழைத்தேன்.

*

தேடிய பணத்தின் கணத்தில்
வரவு எது.......?
செலவு எது......?
வகுத்துப் பார்த்தேன்.
அப்போதுதான்–

கோடி கொடுத்தும் வாரத
எதுவோ ஒன்று
என்னை விட்டு
ஓடி விட்டதை உணர்ந்தேன்.

எது..... எது...... எது......?

*

ஆ......... ஐயோ........
என்
நிம்மதியைக் காணவில்லையே......!

***

*கலைமுகம்*

# தான -தர்மம்

கந்தசஷ்டி விரதத்திற்காய்
கடுமையான நோன்பு.

*

ஆறாம் நாள்
அதிகாலை
அவசரமாய் விழித்தெழுந்து
ஆறேழு கறிவகைகள்
அவதி அவதியாய்ச் சமைத்து

அடுத்த வீடு...
அடுத்த வீட்டுக்கு
அடுத்த வீடு என்றெல்லாம்
ஆனந்தமாய் கொடுத்தனுப்பி
உண்டு- மகிழ்ந்து
உறங்கிப் போனார்கள்.

தான தர்மம் கொடுத்தபின்
சாப்பிட்டதால்-
"சஷ்டிவிரதம்
சரியான முறையில்
பூர்த்தியாயிற்று" என்ற
பூரிப்புடன்.

*

சமைத்த உணவுகளையே
சாப்பிட ஆளில்லாத

அடுத்த வீடுகளில்
தானம்வந்த உணவுகள்
தவம்கிடந்து கெஞ்சின.

"எங்களிலும் கொஞ்சம்
எடுத்துச் சாப்பிடுங்களேன்......."

*

தெருவோரத்தில்–
நிர்ப்பந்தப் பட்டினியால்
நிரந்தர விரதம் காக்கும்
ஏழை வயிறொன்றின்
ஏக்கக் குரல்.

"அம்மா பசிக்குது"

*

பார்த்திருந்த கந்தக் கடவுள்
பரிதாபமாய் முணுமுணுத்தார்.

"தானம்" தெரிந்த மனிதர்களுக்கு
தர்மம் தெரியவில்லையே.......!"

***

# நான் ஓடிக்கொண்டிருக்கிறேன்!

நான்
ஓடிக் கொண்டிருக்கிறேன்!

என்னை
துரத்திப் பிடித்தவர்களை
சேர்த்துக் கொண்டு–
சோர்ந்து நிற்பவர்களை எண்ணி
சிரித்துக் கொண்டு–
நான் ஓடிக்கொண்டிருக்கிறேன்.

*

என் ஓட்டம்
வாழ்க்கைகளை
கவர்ந்து கொண்டல்ல.
சுமந்து கொண்டு.......

*

என் பாதையிலே
குயில்கள் கூட – தங்கள்
குரலை மறந்து
குடங்கிப் போனதுண்டு!

காக்கைகள் கூட – தங்கள்
கரைதல்களையே கானங்களாக்கி

களித்துச் சிரிப்பதுமுண்டு!
காரணம்–
முயற்சிகளையே முதிர்ச்சிகளாக்கி
முடிவு சொல்லும் நியதிகளின்
சுழற்சிகளுக்குள் நான்
சிக்கிக் கொள்பவன்.

*

எனவே–
கலைத்தல்களினால்
களைத்துப் போய்விடாமல்
துரத்திவந்து என்னை
வளைத்துப் பிடியுங்கள்!

வாழ்க்கையாய்
உங்கள் கைகளுக்குள்
வளைந்து நிற்பேன்.

*

என்குரல் கேட்கிறதா......?
"நான்தான் காலம்"

நான் ஓடிக் கொண்டிருக்கிறேன்!

***

# மகனே மறக்காதே!
## பருவம் பதினாறு!

பருவம் தேரேறி நிற்கும்
பதினாறு வயதுனக்கு!
உருவில் மாற்றம் வரும்.
உணர்வுகள் கீதம்பாடும்.

கல்வியிலே கவனம் நில்லாது.
கன்னிமலர்களின் விழிகளுக்குள்ளே
காதலைத் தேடிக் கரைந்து போவாய்!

நிலைக்கண்ணாடிகள் உன்னை
நீண்ட நேரம்
நிற்க வைக்கும்.

படுக்கைக்குச் செல்லும்போதும்
பத்துத்தரம் தலைவாரி
பார்த்து ரசிப்பாய்.
கண் உறங்கும்போதும்
கனவுகள்
காதுக்குள் ரகசியம் சொல்லும்.

உள்ளம் வேர்க்கும். ஆனால்.......
உடல் நனையும்!
வாலிபத்தின் வசந்தக்காற்று
வாசம் தெளித்திருக்கும்
வயது.... பதினாறு உனக்கு.

*

அறிவேன் மகனே.....! அறிவேன்,
இந்த வயதுள் விழுந்துதானே.....
நானும்
எழுந்து..... நடந்து வந்திருக்கிறேன்.
அதனால்தான் சொல்கிறேன்.

இந்த வயதில்-
கல்வியில் மட்டுமல்ல.
கண்கள் காட்டும் பாதையிலெல்லாம்
உனக்கு கவனம் தேவை.
காரணம்-
பருவம் தேரேறி நின்று
பாதையை மாற்றிவிடத் துடிக்கும்
பதினாறு வயதுனக்கு.   இனி-

காதலைத் தேடி
கண்கள் அலைந்தால்
அவற்றைக் கட்டிப்போடு!
உணர்ச்சிகள்
உன் திடத்தை உருக்கப்பார்த்தால்
அவற்றை உடைத்துப் போடு!
கல்வியில் மட்டும்..... உன்
கவனத்தை நிறுத்து!

இந்தக் கணணி யுகம்
காலத்தின் தேவைகளை
தன்
கைகளிலே சுமந்து கொண்டு
காத்து நிற்கிறது உங்களுக்காக-

*

கல்வி.......!
கல்வி........!
கல்வி....... இது ஒன்றுதான்
காலத்தை- உன் காலடியில்
காவல் நிற்கச் செய்யும்.
வாழ்க்கையின்
வசந்தக் காற்றுகளை- உன்
வாசல்தேடி அழைத்துவரும்.

மகனே! மறக்காதே!
***

# பாரதிக்கு

## பார்–அதி அவசரம்!

அடுப்பூதும் பெண்களுக்குப்
படிப்பெதற்கு என்று
அலட்சியமாய் நினைத்த காலத்
தடுப்புகளைத் தகர்த்தெறிந்து
மிடுக்குடனே உயர்ந்து நிற்கும்
பெண்மை கண்டேன்!
பெரு – மகிழ்ச்சி கொண்டேன்.

*

அரசியலும் அறிவியலும்
அரிவையரைத் தத்தெடுத்து
விரைகின்ற வேகங்கண்டு
வியக்கின்றேன்!

அன்று–
கூடுகட்டி வீட்டுக்குள்
குமைந்திருந்த பெண்ணினம்
இன்று
நாடுகட்டிக் காக்கின்ற
இயல்புற்றார் நயக்கின்றேன்!

பள்ளிப் படிப்பினிலும்
பட்டத் துறைகளிலும்
செல்லும் இடமெல்லாம்
சிறக்கின்றார் பெண்கள்

"சிறப்புற்றன என்கவிகள்" என்றே
செருக்குற்றேன்!
சிரித்தபடி திரும்பிப் பார்த்தேன்.
திடுக்குற்றேன்!

ஐயகோ.....
என்ன இது அலங்கோலம்....!
*
தோடுகுத்தி, மூக்குத்தி
தொங்கட்டான் ஆடவிட்டு
கோடுநடு வகிடெடுத்து
கூந்தல் அள்ளி முடிச்சுப் போட்டு
வெண்ணெய் வழுக்கலாய்
முகம்மழித்து ஆண்கள் பலர்
கண்ணில் தெரிகின்ற
காட்சி கண்டேன்.
கலங்கிப் போனேன்!

ஓ.....இவர்கள்
சேலைகட்டித் திரியும் நாள்
தொலைவில் இல்லை.
தெரிந்து கொண்டேன்!
அதற்கு முன்னர்......

அடுத்ததோர் பிறவி
அவசரமாய் எடுத்து நான்
அகிலத்தில் பிறக்க வேண்டும்!

அடுப்பூதும் அலிகளென
ஆகுமுன்னர் இவர்களுக்காய்
ஆண் பெருமை பாடவேண்டும்!
***

*கலைமுகம்*

# காதல் செய்யுங்கள்!

காதல் செய்யுங்கள்!
காதல்-
கல்யாண மாலைகளை உங்கள்
கழுத்திலே சூட்டும் எனில்
காதலர்களே!
காதல் செய்யுங்கள்!

*

வாலிபம் தெளிக்கின்ற
வசந்த நீரெல்லாம்
காதலின் ஊற்றாய் எண்ணிக்
கரைந்து போகாமல்
வாழ்க்கையே காதலாய்
வரித்துக்கொள்ள முடியுமெனில்
காதலர்களே!
கலங்காமல் காதல் செய்யுங்கள்!

*

முல்லைப் பூப்போல முகிழ்க்கின்ற
முதற்காதல்
முறிந்து போனால்-

புண்ணிலே தீபட்டாலும்
பொறுக்கின்ற வைர நெஞ்சும்
கண்ணிலே வளர்த்த அன்பால்
கலங்கியே கண்ணீரில் ஆடும்.

உள்ளத்தின் எங்கோ ஓர் மூலைக்குள்
முள்ளைப்போல்
முடிச்சுப்போட்டுக் கொண்டு
தொல்லை தரும்.
சுகத்தைக் கெடுக்கும்.

*

எங்கோ–
நம்பிக்கையின் அத்திவாரத்தில்
நல்லறமாய்த் தொடங்குகின்ற
இல்லற வாழ்க்கையிலும் கூட
"உண்மை அன்பு" எனும்
தடத்தைத் தவறவிட்டுத்
தவிப்பீர்கள்.

அங்கே–
சாதாரண வார்த்தைகள் கூட
சல்லடை அம்புகளாய் மாறி
வாழ்க்கையைச்
சரியச் செய்து விடும். எனவே–

காதல் செய்யுங்கள்!
காதல்–
கல்யாண மாலைகளை உங்கள்
கழுத்திலே சூட்டும் எனக்
கருத்திலே துணிவிருந்தால்–

காதலர்களே!
காதல் செய்யுங்கள்.
***

# இதயங்களை இணைப்போம்

'தேன்வந்து பாயும்' என்று
காத்திருந்த காதுக்குள்ளே
தேனீயே புகுந்து விட்ட
துன்பம் போல்...

ஏன் வந்து நீ புகுந்தாய்
என் இதயத்துள்?
என்னுடலை-

ஊன்வடித்த நாரைப் போல்
உருக் குலைத்து
ஏங்கவிட்டு-
ஏன் மடித்துப் போட்டாய்
என் இதயத்தை?

*

சித்தர்களும் புத்தர்களும்
எத்தனைதான் சொன்னாலும்
காதலெனும்-

பித்தத்தைத் தவிர்த்து நிற்க
முடிவதில்லை மானுடத்தால்!...

வண்டுக்கும் மகரந்த
மலருக்கும் இடையினிலே
காற்றுவந்து மோதுவது
சொந்தத்தைக் கலைக்கவல்ல.
சோபிதங்களை வளர்க்கவே.
தெரிந்துகொள்!

*

மானுடத்தில் மட்டுமல்ல
மண்ணுயிர்கள்
அத்தனையுமே

காதலெனும் ஊடகத்தால்
கலப்பது தான் வாழ்க்கை
இனியேனும்-

ஆசைகளை மட்டுமே ஆடைகளாய்
அணிந்து கொள்ளும்
இதயங்களை
எடுத்துவிட்டு

உணர்வுகளைப் புரிந்து கொள்ளும்
இதயங்களே...
என்றுமாய்
இணைத்துக் கொள்வோம்!

***

*தினமுரசு*
*08-01-1998*

# வருவேன்—என் மனைவியோடு.....

நேற்றுவரை... என்
நினைவில் நின்றவளே!

இன்றுவரை... உன்
கற்பனை உலகம்
கனவுகளால் மட்டுமே
கனத்துப் போனது. அதைக்
கலைத்துப் போடுவதால்-
உனக்கு மட்டுமல்ல,
-எனக்கும்தான்-
வாழ்க்கை
நெருஞ்சி முள்ளாகி
நெருடிக் கொண்டிருக்கும்!

*

நீயோ-
நிஜத்தை மறுத்து
நிழலைத்தேடி நீந்துகிறாய்!
நானோ
நிழலை வெறுத்து
நிஜத்தைத்தேடிச் செல்கிறேன்.

அங்கே-
வசந்தங்கள் பூக்கிறதோ
இல்லையோ;
வாழ்க்கை பூக்கும்.

*

இறுதியாக
உனக்கு சில வரிகள்.

"காதல்" என்பது
வாழ்க்கையின்
வசந்தகாலம் மட்டுமல்ல
பலவகையில்
அதுவேதான் வடிவங்கள்!

அதற்கு-
ஆர்ப்பாட்டம் நிறைந்து-
கொஞ்சும்
அழகுகளை விட
அர்ப்பணம் ஆகிவிடத் துடிக்கும்
அன்பு ஒன்றுதான்
அடிப்படை.

இதை மட்டும்
உன் இதயம்
உணர்ந்து கொண்டால் - ஒரு
நண்பனாக நின்றாவது
உன் மண விழாவில்
நல்வாழ்த்துக் கூற
நான் வருவேன்.
என் மனைவியோடு!

***

*தினமுரசு*

# மனிதங்களை விட....

தென்னையின் கீழே நின்று
சிறுநீரையும் தான் ஊற்றுகிறோம்.
ஆனாலும்- அது
தெவிட்டாத இளநீரை
தேக்கித் தருகிறது.

இந்த
மனித மரங்களுக்கு-

பன்னீராய் வார்த்து
பாலாபிசேகம் செய்தாலும்- கொதிக்கின்ற
வெந்நீராய் சுட்டு
வேதனையைத் தருகின்றனவே...!

*

எலும்பைச் சுவைத்து விட்டு
கால்களைச் சுற்றிக்
காவல் நிற்கிறது நாய்.
இறைச்சியைத் தின்று விட்டு
இதயத்தையே கடித்துவிட்டுப் போகிறான்
மனிதன்.

இறைவா!
மானுடப் படைப்பை கொஞ்சம்
மட்டுப்படுத்து!
இனிமேலாவது-
உன் படைப்புகள்
உன்னதமாய் உயரும்!
***

*தினகரன்*
*1978*

# தெரிந்தவர்கள் சொல்லுங்கள்!

"ஆடி அடங்கும் வாழ்க்கையிது
ஆறடி நிலமே சொந்தம்" என
பாடிய புலவனைக்
கேட்கின்றேன்.
நீ
பாடிய வரிகள் சரிதானா....?

மூடிய மண்ணை
மீண்டும் மீண்டும்
மாண்டவர் உடலைப் புதைப்பதற்கு
தோண்டுதல் நீரும் அறியீரோ...
பின்
சொந்தம் என்பது எப்படியோ...?

*

ஏழை அழுத கண்ணீர்
கடவுளின் கையில்
கூரிய வாளாமே.....!

இந்த
இரக்கமில்லா உலகத்தில்
எத்தனை பெண்கள்
கண்ணீராலேயே எழுதப்பட்ட
கதைகளாகி அழுகிறார்கள்
காமவெறியர்களால்......

கடவுளின் கைவாள்
ஏனின்னும் கூராகவில்லை...?

*

மனிதனுக்குக் கொடுக்காமல்
மறைத்து வைத்திருந்த
"நன்றி" எனும் நற்குணத்தை
நாய்களுக்குப் படைத்துவிட்ட
இறைவனே...

உன்மீது நியாயம் கோரி
எந்தக் கோட்டில்
வழக்குப் போடுவது....?

*

"பசி" என்ற சொல்லுக்கு
பொருள் என்ன என்று கேட்கும்
பணக்காரர் கைகளிலே-
பட்டினிக்குத் தீர்வுதேடும்
பதவிகளைக் கொடுத்து விட்டுப்
பார்த்திருந்தால்-

பணக்காரர் வீட்டிலே
பெட்டிகள் நிறையும்.
வறியவன் வீட்டு
வயிறுகள் நிறையுமா....?

*

வேதன் விதித்த வாழ்வில்
வேதனைதான் சத்தியங்களா?
இல்லையெனில்
ஆதாமும் ஏவாளும் வாழ்வில்
அடியெடுத்து வைத்தவேளைதான்
ஆகாத வேளையோ....

மனிதன்- ஏன் இன்னும்
அழுது முடிக்கவில்லை?
***

*கலைமுகம்*

# தேவை

கை நீரே
கை நழுவிப் போகின்ற
மனிதவாழ்வில்
கடல் நீரைக்
கைப் பிடிக்குள்
கட்டிவைத்தும் என்ன பயன்?

*

தாகத்துக் குதவாத
சமுத்திரமாய் வாழ்வதிலும்
சிறு
ஓடைக் குடிநீராய்
இருப்பதிலோர்
பெருமையுண்டு.

*

காலத்தை சொல்லாத
காவியங்கள் படைப்பதிலும்
மானுடத்தின்
ஓலத்தைக் கோடுகாட்டி
ஒப்பாரிப்
பாட்டொன்றெழுது!
அதில் உயிரிருக்கும்.

***

# புதிய தீர்ப்புகள்

## அறத்தின் தீர்ப்பு

வாதம்:- தசரதனின்
உயிரினும் பிரிய கைகேயி
அவன்
உயிர் பிரியக்காரணியாய் ஆனாள்.
அது குற்றம்!

*

எதிர்வாதம்:- இல்லை....! அறம் மறந்த வாழ்க்கை
அவனை அழித்தது.

"தன்னுயிர் ஈந்தும் மண்ணுயிர் காப்பது
மன்னவன் கடமை"
மனுதர்மம் சொல்கிறது. காலமெல்லாம்
"மணக்கோலம்" கொண்டிருந்தால்
மரணமில்லை என்பதற்காய்: அறுபதினாயிரம்
மங்கையரை மணமுடித்து - அவர்தம்
மனங்களையும்- இளமை
மணங்களையும்
மரணிக்கச் செய்தபோதே

மனுதர்மத்தையும் தன்
மனோ தர்மத்தையும்
மரணிக்கச் செய்துவிட்டவன் தசரதன்.

*

தீர்ப்பு:- பெண்மைக்கு அவன் செய்த பெரும்பாவம்
கண்ணெதிரே கைகேயியாய் நின்றது!
அவனைக் கொன்றது!

***

# தியாகத்தின் தீர்ப்பு

வாதம்:- மானுட வாழ்வுக்கு
ஆதாரம் காட்டி வாழ்ந்த
அவதாரராமன் உயர்ந்தவன்.

*

எதிர்வாதம்:- சேதாரம் அற்றவள் சீதை என்று
உலகம் தெரிந்து கொள்ள(த்)
தீ வளர்த்தானே...! அப்பொழுதே
சீதையின்
சீவ ஆதாரத்தைச் சிதறடித்து
சிந்தனையால்
சேதாரம் ஆகிப்போனவன் இராமன்.

இராமனின் அரச போகத்திற்கு கைகேயியால்
அவலம் வந்தபோதும்
புருசனைத் தொடர்வதே பெண்மை என்று
பெருமை பெற்றவள் சீதை.

எண்ணத்தில் வண்ணமில்லா
எவனோ சொன்ன வார்த்தைக்காக
தன்னந் தனியளாகச் சீதையைத்
தவிக்க விட்டவன் இராமன்....!

*

தீர்ப்பு:- சீதையின் திண்மைக்கு முன்னால்
இராமன்... துரும்பு!

***

*தினக்குரல்*
*13-09-1998*

# எனக்கொரு பதில்சொல்!

"பெண்ணுரிமை"
"பெண் விடுதலை" என்று
மூச்சிழுத்துப் பாடி
பேச்சிழந்து கிடந்த பெண்ணினத்தை
ஆர்த்தெழச் செய்த பாரதியே!

"எட்டும் அறிவினில்
ஆணுக்கிங்கேபெண் இளைப்பில்லை"
என்று
அறிவுலகிலும் அவர்களை
ஆரோகணிக்கச் செய்தவன் நீதான்!
அதிலோர் ஐயமில்லை.
ஆனாலும் ஐயா!
நெடுநாளாய் என்மனதுள்
நெருடுகின்றதொரு கேள்வி.
*

பட்டினியால் வாடிய நின்பிள்ளைகளின்
பசியறியாமல்
பாட்டெழுதிக் கொண்டிருந்தாய்
பராவாயில்லை. ஆனால்–
பெற்றமனம் பொறுக்காமல்
பிள்ளைகள் பசி சகிக்காமல்
அண்டை வீடுகளில் உன்மனைவி
அண்டிவரும் அரிசியையும்
கொட்டிக் களிப்பாயாமே குருவிகட்கு!
என்னய்யா நியாயம்?

பேணுதல் தாய்மை - அது
உன் மனைவிக்கும் பிறப்புரிமை.
அதைத் தட்டிப்பறிக்க
உனக்கும்தான் ஏது உரிமை?

*

"காக்கை குருவி எங்கள் ஜாதி" என்று
காருண்யம் பாடிய கவிஞன் நீ!
கனவுகளில் வாழ்ந்தவன்.
உன் மனைவி.... ஒருதாய்.
நிஜங்களின் நிழல்களிலேயே
நிலைத்துப் போனவள்.

"ஏற்பது இகழ்ச்சி" என்றதொரு
இலக்கணத்துட் சிறைப்பட்டுப் போன
மனிதஜாதி தன் பிள்ளைகள் என்பதை
மறந்து போகாதவள்.
அந்த-
பெற்ற மனத்தின் தவிப்பை
உன் காருண்யம்
புரிந்துகொள்ள மறுத்தது ஏன்?

*

மனைவி என்பவள்
மறுத்துப்பேச முடியாதவள் என்று-
உனக்குள்ளும் உறைந்துகிடந்த
ஆண் ஆதிக்கத்தனத்தின்
அடையாளம்தான் அதுவோ....?

பாரதியே! எனக்கொரு
பதில்சொல்!

***

# காதலை மட்டும் பாடிக் களித்தது போதும்!

காதல்! காதல்! காதல்!

மானுடம் மட்டுமல்ல.
மண்–விண் அனைத்துமே
காதல் என்ற சங்கமத்தில்தான்
கனிந்து மலர்கிறது.

*

மலர்ச்சியில் இருந்து
மரணத்தின் கோடுகள் வரை–
மனத்தில் இருந்து
மனிதத்தின் நேயங்கள் வரை–
வாழ்க்கை என்ற புத்தகத்தின்
ஒவ்வொரு பக்கமுமே
காதல் என்ற வடிவத்தின் ஏதோவொரு
வார்ப்புகள்தான். ஆனாலும்–

கவிஞர்கள் சிலரின்
கற்பனைத் தொடுகைகள்
காமத்தின் விரகங்களை மட்டுமே
காதலாகப் பாடிப்பாடிக் களிப்பது ஏன்?

*

"காதல் போயின் சாதல்" என்று
கவிதைசொன்ன பாரதிகூட:
காதல் என்றதொரு

கோட்டுக்குள் மட்டுமே
குறுகிப்போய் நின்றிருந்தால்–
பாட்டெழுதும் எங்களுக்கு – ஒரு
கோட்டையென நிமிர்ந்துநின்று– காலக்
குறிகள் சொல்ல முடிந்திருக்குமா?

காலம் மறக்காத
கவிஞர்கள் அனைவருமே – தாம் வாழ்ந்த
காலத்தை மறக்காமல்
கவிதை வடிவங்களாய் ஆக்கிக்
காட்டினார்கள். அதனால்தான்:
காலம்– இன்னும் அவர்களை
காதலித்துக் கொண்டிருக்கிறது.

*

கார்முகில் திருந்தி
கவின்மழை ஆகுதல்போல்
கருத்துக்கள் திருத்துகின்ற கவிதைகள்தான்
காலத்தின் தேவை! எனவே–

காதலை மட்டுமே பாடிப்பாடிக்
களித்தது போதும்!
காலத்தையும் பாடுவோம்!
காலதேவன் மாற்றிமாற்றிப் போடுகின்ற
கோலத்தையும் பாடுவோம்!

கவித்துவம் எங்களையும் தேடி
கைகோர்த்துக் கொண்டு
மலரும்! மணக்கும்!

*தினகரன்*
*1978*

# 'தேர்'தல் சக்கரங்கள்

## தேர்தல்

புதிது புதிதாய்
வேடமிட்டு
'வேதம் ஓதப்'
புறப்படுகின்ற
புண்ணிய காலம்!

## அரசியல்வாதிகள்

வாமனராய்
வடிவெடுத்து,
வாக்குகளை
யாசித்து
'பா.உ'வாய்
'மந்திரி' யாய்
பேருரு எடுத்தவுடன்..
முதலாம் அடியை
எங்கள்
முதுகிலேயே
அளப்பவர்கள்!

## தேர்தல் பிரச்சாரம்

வாய்களால்
கடிபட்டுக் கொள்ளும்
நாய்களுக்கு
வார்த்தைகளால்
கடிபட்டுக் கொள்ளும்
வித்தையை
மேடை போட்டு
விளக்குகின்ற
மேன்மை!

## வாக்காளர்கள்

தேர்தலுக்கு முன்....
முகவரிகளாய்
தேடப்பட்டு,
புதிய முகம்
பொருத்தப்பட்டுப்
புன்னகைப்பவர்கள்!

தேர்தலுக்குப் பின்.....
பழைய முகத்தையும்
சேர்த்தே
தொலைத்துவிட்டு
பரிதவித்து நிற்கும்
பாவப் பட்டவர்கள்!

***

*தினமுரசு*
*20-03-1997*

# வயிற்றுப் பாட(ட்)டுகள்!

## பசி

முந்தானையால்
இழுத்து
மூடப்படுகின்ற
பத்தினித்
தனங்க ளெல்லாம்

பசியென்னும்
அசுரக் காற்றின்
வேகத்தில்
இழுபட்டுப்
பறக்.....கிறது.

## அகதிகள்

எலும்புச்
சுவையிலே
சொக்கிப்
போனவர்களால்;
வாழ்க்கையெனும்–
சதையைத்
தவறவிட்டுத்
தவிப்பவர்கள்

## ஏழ்மை

நிர்ப்பந்தப் பட்டினி
விரதம் காத்து–
நிரந்தரப் பசியில்
தீயை வளர்த்து–

எண்ணெய் இன்றி
என்றும் எரியும்
வேள்விக் குண்டம்
எங்கள் வயிறு...

## மிச்சம்

நாய்களொடு
நாய்களாக–
கட்டிப் புரண்டு
எடுத்துப் பிரித்த
எச்சில் இலைக்குள்
இருந்த மிச்சம்...!

சப்பித் துப்பிய
எலும்புச் சக்கைகள்.

***

*சிந்தாமணி*

*தினமுரசு*
*21–08–1997*

# வடிவங்கள்

## வாலிபம்

ரத்தத்தின்
வேகத்தில்
நித்தத்தைத்
தவறவிட்டு

காதல்
பித்தத்தின்
ராகத்தில்
சித்தத்தைச்
சிதறவிட்டு

வெறும்
சத்தத்தின்
மோகத்தில்
தடுக்கி
விழுத்தப் பார்க்கும்
வித்தக விபரீதம்
வாழ்க்கையெனும்

தத்துவத்தின்
தலைவாசல்!

## தாம்பாத்தியம்

சதயங்கள்
சங்கமத்தால்
இல்லறமாய்த்
தொடங்கும்!

இதயங்கள்
சங்கமித்தால்
நல்லறமாய்த்
தொடரும்!

## மானுடம்

சிறுதுளி நீரில்
உரு - உடல்
கொண்டு
ஒரு துளி காற்றில்
உயிர்வழி
நின்று
பெருவலி பேசி
பேதையாய்
உலர்ந்து
சிறுபொறி தீயில்
நீராகும் மகிமை!

***

*தினமுரசு*
*1998*

# கடுகுக் கவிதைகள்

## மனிதன்

விலங்கினம்
அனைத்தையும்
இணைத்தே இறைவன்
நினைத்துப்
பார்த்ததில்
நிலைத்ததோர்
படைப்பு!

## காதல்

கடலேயின்றி
அலைகள்
ஆர்ப்பரிக்கும்
அதிசயம்!

## குடும்பம்

இது
ஒரு கோவில்!
'குறி'
தவறிப்
போய்விட்டால்,
வெறுங்கோணல்-வில்!

## வாழ்க்கை

சிலருக்கு
ஆலிங்கனச் சுகம்;
பலருக்கு
அசோகவனச்
சோகம்.

## பிள்ளைகள்

நாம்
வாழ்ந்ததைச்
சொல்கின்ற
வரவுக் கணக்குகள்!

## மரணம்

ஒரு கணக்கை
முடிப்பதற்கு
கடவுள் போடும்
கடைசிப் புள்ளி.

*தினமுரசு*

***

*தினமுரசு*
*09-03-1997*

# சின்னச் சின்னக் கவிதைகள்

## பெண்ணுள்ளம்

சாத்தானும்
தெய்வமும்
சந்திக்கும்
சந்நதி!

## இசை

காற்றுக்கு
வேலியிட்டு
கட்டி
இழுத்து வந்து
ஒலிக் கூட்டுக்குள்
அடைத்துவிடும்
வித்தை!

இதை ரசித்தால்
உடலுக்கு
இறக்கை முளைக்கும்
இதில் லயித்தால்
உயிருக்கே
இறக்கை முளைக்கும்!

## புத்தகம்

எடுத்துப் பிரித்தால்
ஏதோவொன்றைத்
தரும்!

## குழந்தை

தெய்வங்கள் சேர்ந்து
சிரிக்கின்ற பருவம்.
ஆனாலும்-

மனிதன் என்ற
விலங்கின்
முதல் வடிவம்

## மௌனம்

ஆயிரம்
அர்த்தங்களை
சப்தம்
இன்றியே
ஒலிக்கும்
சங்கீ(கே)தம்....!

## மது

நன்றிக்கு இலக்கணம்!
உறவாடத்
தொடங்கிப் பார்!
உன்
உயிர்
போகும்வரை
உறவாடும்!

*தினமுரசு*

***

# ஆறாம் அறிவு

கல்லுத் தடுக்குதென்று
காலால்
உதைத்துத் தள்ள நினைத்தால்
கல்லுக்கு நோகுமா.....?
காலுக்கு நோகுமா....?

*

கையால்
மெல்ல நகர்த்திப் பார்ப்போம்!
நகர்தலும் கூடும்.
இல்லையெனில்-

நாம் விலத்தி
நடந்து விடுவோம்

*

கல்லென்ன....
நம்மை
கலைத்து வரவா போகிறது?
***

*விடிவெள்ளி*

# கவிஞனும் கடவுளும்

கே: உன்னை மறந்து - மானுடம்
தன்னையே புகழ்ந்து கொள்ளத்
தவிக்கிறதே... ஏன்?

ப: சேவல்கள் கூவுவதால்
பொழுதுகள் விடிவதில்லை.
விடியலின் பொழுதறிந்தே
சேவல்கள்
புளகித்துக் கூவுகின்றன என்பதை
புரிந்து கொள்ளாததால்.

*

கே: காதலைத் தேடித் தேடி
உயிரினங்கள்
கரைந்து போவது எதனால்?

ப: தன்னை–
பூசிக்கத் தெரிந்த மனங்களைவிட–
நேசிக்கத் தெரிந்த இதயங்களையே
வாழ்க்கை
யாசித்துக் கொண்டிருக்கிறது
அதனால்.

*

கே: இதயப் பாறைகளில்
சுகங்களைவிட சோகங்கள்
ஏன்
துல்லியமாய்ப் பொறிகின்றன?

ப: நினைக்க வேண்டியதை மறந்து-
மனங்கள்
மறக்க வேண்டியதையே
நினைத்து நினைத்து மாய்வதால்.

*

கே: காலிலே அடிபட்டால்
கண்கள் ஏன் அழுகின்றன?

ப: அது- காயத்தினால் ஏற்பட்ட
கவலையினால் அல்ல. ஒரே-
காயத்திலே இணைந்துவிட்ட
கருணையினால்.

*

கே: ஆத்மாவின் ராகங்களில்
அழுகுரல்கள் கேட்காவிட்டால்...?

ப: எந்தன் முகவரியைக் கூட
மானுடம்
எப்பொழுதோ மறந்திருக்கும்!

***

*கலைமுகம்*

# பாமரன் கேள்விகளும் படைத்தவன் பதில்களும்!

துன்பங்கள் தம்மின் தோற்றுவாய் என்ன?
மாயையில் கூடிய மயக்கங்கள் கோடியாய்
ஆசையில் ஊடியே அலைகின்ற மனங்கள்.

*

மனத்தை நீயேன் மனிதர்க்குப் படைத்தாய்?
சொல்லியே அழுதிட யாருமே இல்லாத
துன்பங்கள் வருகையில் தெரிந்துகொள்வாய்!

*

துரதிஷ்டம் என்பதன் விளக்கந்தான் என்ன?
அன்பினைக்கூட யாசகம் கேட்கும்
அவலம் நிறைந்தவன் வாழ்க்கையது!

*

நரகம் என்பது எப்படி இருக்கும்?
அன்பை கருணையை நன்றியை மறக்கும்.
மனிதர்கள் நடுவே வாழ்ந்துபார் புரியும்!

*

விதியின் பார்வை விபரீதம் ஆனால்...?
கழுத்தில் சூடிய மாலைகள் கூட
கயிறாய் ஆகிக் காலனை அழைக்கும்.

*

தோல்விகள் இல்லா வாழ்க்கையும் இலையோ?
சறுக்கல்கள் இல்லா வாழ்க்கையே இல்லை-அதை
சரிவென்று பயந்தால் சரித்திரம் இல்லை.

*

நாத்திகம் வாழ்வதால் நன்மைகள் உண்டா?
என்னை மறுப்பவன் இருப்பதால்தான்-நான்
இருப்பதை உலகம் மறப்பதில்லை.

*

மனிதர்க்கு இத்தனை மதங்கள் எதற்று?
பாதைகள் பலவாய் அமைவது மனிதப்
பயணங்கள் எளிதாய் முடிவதற்கே.

*

மதங்களால் மனிதர் மாய்தலும் உண்டே....?
மதங்களின் பெயரால் "மதங்களை" வளர்த்து
மாயுங்கள் என்று நானா சொன்னேன்?

*

மெளனம் என்பதன் அர்த்தங்கள் என்ன?
அறியாமைதனில் நுனியாய் இருக்கும்
அறிந்தவர் மனதுள் "அடக்கமாய்" சிரிக்கும்!

*

பித்தன் சித்தன் பேதங்கள் என்ன?
ஆசைக் கடலுள் அமிழ்ந்தவன் பித்தன்
அதனுள் களைந்து மிதந்தவன் சித்தன்!

*

அறிவு ஞானம் அளவுகள் என்ன?
எதையும் தெரிந்து உணர்வது அறிவு
அதனுள் தெளிந்து உயர்வது ஞானம்!

*

விஞ்ஞானி மெய்ஞானி தொடர்புகள் என்ன?
மெய்ஞானியரின் கற்பனைகள் தான்
விஞ்ஞானியரின் கருப் பொருள்கள்.

*

மானுடம் உன்னை வென்றிட வழிசொல்!
நரையை ஒருமுறை நிறுத்திக் காட்டு!
முதுமையை முடிந்தால் முடித்துக் காட்டு!

*

உனக்கும் எனக்கும் இடைவெளி தூரம்...?
உனக்குள் வளரும் ஆசைகள் தேடும்
அளவுகள் என்ன? அதுவே தூரம்!

***

# கரமுண்டு..... திறமுண்டு!

தலைமீது மழைகொண்டு
அலைகின்ற முகிலும்
விலையொன்று கேளாமல்
தரைமீது கொட்டும்!

தரையுண்டு மறைகின்ற
தண்ணீரும் ஓர்நாள்
உரங்கொண்ட கரம்பட்டு
ஊற்றாகிப் பாயும்!

கலைகொண்ட கரம்சேர்ந்து
உளிகொண்டு மோத
மலைகூடச் சிலையாகி
மனந்தன்னைத் தட்டும்!

கரமுண்டு இறைதந்த
திறங்கோடி கொண்டும்
தரமென்றும் தாழ்வென்றும்
தளர்வென்ன சொல்லு!

திடங்கொண்டு போராடத்
துடிக்கின்ற கைக்குள்
வரங்கூடி வரும் - நம்பி
வளையாமல் நில்லு!

***

*தினகரன்*
*05-07-1998*

# மனமே...! உனக்குத்தான்

பெண்களை எண்ணிப்
பேயராய் அலையும்
பேதமை இருந்தால்
விட்டுவிடு!

கண்களை நம்பிக்
காதலில் வீழ்ந்தால்
கவலைகள் வளரும்
விட்டுவிடு!

அன்பின் பெருமை
அறியாத மடையர்க்கு
அறிவுரை சொல்வதை
விட்டுவிடு!

பண்பினை மதித்துப்
பழகாத மனிதர்தம்
பழக்கம் எதற்கு
விட்டுவிடு!

நண்பர் பகைவர்
யாரென்று அறியாது
நட்புக் கொள்வதை
விட்டுவிடு!

தன்குறை உணராது
பிறர்குறை தேடிடும்
தரமிலார் தொடர்பினை
விட்டுவிடு!

சோற்றுக்கும் மலத்துக்கும்
பேதங்கள் புரியாத
சொந்தங்கள் துன்பங்கள்.
விட்டுவிடு!

ஆறிருந்தும் நாற்றச்
சேற்றுக்குள்ளே வீழ்ந்து
ஆனந்திக்கும் பன்றிக்
குணங்களது.

***

*தினகரன்*
*1978*

# இளமையின் கானம் முதுமையின் ஞானம்

அருணகிரி பட்டிணத்து
அடிகளும் இன்னும்
ஆயிரக் கணக்கில்
முனிவோரும்

ஆசைகள் தீர்த்திட
ஆடிக் களித்துத்தான்
அய்யகோ எல்லாமும்
மாயையென்றாரே!

அவர்சொன்ன தத்துவம்
அறுபதன் பின்னாலே
அதுவரை அவர்கள்
பொறுக்கட்டும்!

மானுடத் தத்துவம்
மாயையில் வாழ்வதே.
வா மயிலே! வாழ்ந்து
முடிப்போம்.

வெள்ளியாய் சுடர்ந்து
வேர்த்துக் களைத்து
சூரியன் சிவந்து
சுருங்கிடும் மாலை.

கடற்கரை மணலில்
கால்நீட்டிக் கிடந்து
விரிவான் பரப்பை
வெறித்துப் பார்த்தேன்.

எத்தனை மேகங்கள்?
எத்தனை வண்ணங்கள்?
அத்தனையும் இன்னும்
எத்தனை நேரங்கள்...?

சுகங்களாய்.....
சோ......கங்களாய்
வாழ்வே உந்தன்
வடிவங்கள் போலே.

***

*தினகரன்*

*1978*

# அடக்கத்துள் அடக்கம்

மனத்தினை அடக்குவதும் அடக்கம்.
மனிதத்தை உயர்த்துவதும் அடக்கம்.
பிணமாகி அடங்குவதும் அடக்கம்.
புவிவாழ்வே அடக்கத்துள் அடக்கம்!

கடலளவு காட்டுவது அலையடக்கம்.
கற்றறிவு காட்டுவது அவையடக்கம்.
உடலழகு கூட்டுவது உணவடக்கம்.
உள்ளத்தில் உறுதிதரும் உணர்வடக்கம்.

காட்சிகளில் உயர்வுநிலை கண்ணடக்கம்.
கவிதைகட்கு கலைகளுக்கு பொருளடக்கம்.
மாட்சிமைகள் அனைவருக்கும் மனவடக்கம்.
மங்களங்கள் மனைவியர்க்கு மனையடக்கம்.

மானத்தைக் காக்குமுடல் உடையடக்கம்.
மரியாதை காப்பதற்கு உரையடக்கம்.
ஞானத்தைக் கூட்டுவது புலனடக்கம்.
நன்றியிலார் நெஞ்சமெலாம் பொய்யடக்கம்.

உயிரொன்று உருவாகக் கருவடக்கம்.
உயிர்நின்று உடல்வாழக் காற்றடக்கம்.
பேச்சடங்கி மூச்சடங்கி உயிரடக்கம்.
பிணமென்ற பெயரோடு மண்ணடக்கம்!

***

*வீரகேசரி*

*16–03–1997*

# சத்திய போதனை!

மனங்களை போசித்துப் பழகு.
மௌனத்தின் பாசைகள் புரியும்!
மௌனத்தை வாசித்துப் பழகு.
மனங்களின் ஆழங்கள் புரியும்!

மரணத்தை யோசித்துப் பழகு.
மானுட தர்மங்கள் புரியும்!
மனிதனை நேசித்துப் பழகு.
மண்ணியல் வேசங்கள் புரியும்!

அன்பினை சுவாசித்துப் பழகு.
ஆத்மாவின் ராகங்கள் புரியும்!
ஆத்மாவை யாசித்துப் பழகு.
ஆன்மாவின் வாசங்கள் புரியும்!

இயற்கையை பூசித்துப் பழகு.
இறைவனின் சப்தங்கள் புரியும்!
இறைவனை எண்ணியே வாழு!
இதயமே கோயிலாய் மாறும்!

***

# அயர்வினால் தூங்கிப் போனானோ...!?

அடிவானம் கடலாடி
அமிழ்கின்ற வண்ணமாய்
ஆயிரம் பத்துலட்சம்
அலைமோதும் ஆசைகள்
அசைபோடும் போதையின்
அவலத்தில் ஆடுகின்றோம்.

கடிவாளம் இன்றியே
கனவேகம் பாய்கின்ற
கனவுக்குள் வாழ்வதல்லால்
கொண்டவை ஒன்றில்லை
கொள்விலை தெரியாத
கடைக்காரன் கணக்குப்போலே

இத்தனை ஆசைகள்
இத்தனை இன்பங்கள்
ஏனந்த இறைவன் வைத்தானோ?
அத்தனை இன்பமும்
ஆளத் துடிக்கின்ற
ஆசைகொள் மனமும் வைத்தானோ?

எதிர்மறை வாழ்க்கையில்
எதுவரை எதுவென்று
இலக்கணம் வகுத்திட்ட இறைவன்
அதுவரை நாம்செல்ல
ஆசை கொடுத்தபின்
ஆற்றலைக் கொடுக்காத தேனோ?
அயர்வினால் தூங்கிப்போ னானோ...?

*வீரகேசரி*
*09–03–1997*

# இறைவனுக்கோர் இறைவன்

காற்றென அசைகின்ற
நினைவுகள் ஆயிரம்!
கண்களில் மின்னிடும்
கனவுகள் ஆயிரம்!
ஊற்றெனப் பெருகிடும்
உணர்வுகள் ஆயிரம்!
உடல்வதை பெருக்கிடும்
உணர்ச்சிகள் ஆயிரம்!

இதயத்தின் போர்வைக்குள்
ஏக்கங்கள் ஆயிரம்!
உண்மையின் போர்வைக்குள்
பொய்மைகள் ஆயிரம்!
மௌனத்தின் போர்வைக்குள்
மயக்கங்கள் ஆயிரம்!
'மனம்' என்ற போர்வைக்குள்
மறைப்புகள் ஆயிரம்!

உடலென்ற போர்வைக்குள்
உயிர்ப்புகள் ஆயிரம்!
உயிர்ப்பெனும் போர்வைக்குள்
உறவுகள் ஆயிரம்!
இயற்கையின் போர்வைக்குள்
இன்பங்கள் ஆயிரம்!
இன்பத்தின் போர்வைக்குள்
துன்பங்கள் ஆயிரம்!

ஒன்றுதான் உள்ளமே
எத்தனை தொல்லைகள்!
என்றுதான் அறிந்திட
இறைவனே! ஒருமுறை
வந்துதான் உலகினில்
மனிதனாய் வாழ்ந்திடில்
உந்தனைக் காக்கவோர்
இறைவனைத் தேடுவாய்!

***

*தினகரன்*
*16–08–1998*

# மண்மாதா புலம்பல்!

மேகங்களே! வெண் மேகங்களே! என்
கண்ணீரின் கதை கேட்டுச் செல்லுங்களே!
சோகங்களை, என் துயரங்களை அந்த
இறைவனிடம் எடுத்துச் சொல்லுங்களே!

ஒருதாயின் உதிரத்தில் உருவான மக்கள்
இருவேறு பிரிவாகிப் போர் செய்வதோ?
கண்ணீரும் செந்நீரும் என்மேனி தன்னில்
என்றென்றும் அழியாத கறை ஆவதோ?

கீதையின் வடிவில் கண்ணனும் தம்ம
போதமும் செய்த புத்தனும், யேசு
நாதரும், நபிகள் நாயகம் அன்பை
போதித்த தேனோ? யாவையும் வீணோ?

மரணத்தின் மடியில் சொந்தங்கள் இல்லை.
மண்ணுயிர்க் கிந்த நியதியே எல்லை.
பிறவியில் வாராத பேதங்கள் கொண்டு
மனிதர்கள் மனிதங்கள் ஆவதும் என்ன?

சுதந்திரம் என்பது மானுட நீதி!
சோதர உணர்வுதான் அதற்குநல் வீதி!
சுகந்தரும் சாந்தி சமாதானம் ஓங்கி
உயர்வாரோ என்மக்கள் போர்வெறி நீங்கி.....?

மேகங்களே! வெண் மேகங்களே! என்
கண்ணீரின் கதை கேட்க நில்லுங்களே!
சோகங்களும் என் துயரங்களும் நீங்கும்
சுபநாளும் எது கேட்டுச் சொல்லுங்களே!

***

*தினகரன்*
*24-05-1998*

# பாலைவனப் பாதைகள்

பாலைவனப் பாதையிலே
பால்மரத்தை தேடித்தேடி
கால்மரத்துப் போச்சுதய்யா கடவுளே!
வாழ்க்கை
கனவுமரம் ஆச்சுதய்யா கடவுளே!

பாமரங்கள் கூடியிங்கே
பூமரங்கள் போல்நடித்து
"சா"மரங்கள் வீசுதய்யா கடவுளே!
வாழ்வில்
சங்கடங்கள் தீரவில்லை கடவுளே!

பூமரங்கள் கூடயிங்கே
புளுகுமரக் கொப்பிலேறி
போர்க்குணங்கள் வார்க்குதய்யா கடவுளே!
மண்ணில்
பொய்மரங்கள் பூக்குதய்யா கடவுளே!

போதிமரப் புத்தர்வழி
சோதிமரச் சித்தர்வழி
பாதியிலே நிற்குதய்யா கடவுளே!
எங்கும்
பாவமரம் கூடுதய்யா கடவுளே!

அன்பு-நன்றி கருணை அறம்
பண்பு-பக்தி மனிதநேய
ஆத்மமரம் பட்டுப்போச்சு கடவுளே!
உலகம்
அழுக்குமரத் தோட்டமாச்சு கடவுளே!

ஆலை-வாழை அரசமரம்
பாலை-பனை தென்னைமரம்
வாழுமறம் மாற்றவில்லை கடவுளே!
மனிதன்
வழுக்குமரம் ஆனதென்ன கடவுளே!

மேலிருந்து நீயிறங்கி
மொத்தமரம் அத்தனையும்
செத்தமரம் ஆக்கிவிடு கடவுளே!
புதுசா
சேர்த்துநல்ல பாத்திபோடு கடவுளே!

மாற்றுவிதைய பார்த்துப்போடு கடவுளே!
அங்கே
மனிதன்மனதை முகத்திலேவை கடவுளே!

***

# இதுதான் சாத்திரங்கள்!

நாளை.... நாளை என்று
நாட்களை நகர்த்தாதே!

நாளை-
காலன் வந்து உன்
கதவைத் தட்டுகின்ற
நாளாகவும் இருக்கக் கூடும்!

இன்றைய காலைப் பொழுது-
இன்றைய காற்றின் சுவாசம்-
இன்றைய கணக்கின் வரவுகள்-

இவைதான் புதிது.
இவைதான் சத்தியம்.
புரிந்து கொள்!
எழுந்து நில்!

இன்று முடிக்க வேண்டியதை
இன்றே செய்து முடி!

இதுதான்-
சரித்திரம் பொறித்தவர்களின்
சாத்திரங்கள்!

***

# நாளைய கவிதைகள்

எடுத்தாள எனக்கென்றோர்
பூமியும் இல்லையென்ற
ஏக்கத்தை நீக்கிடத்தானே-கையில்
பிடித்த பேனாவிலே
புத்துலகு ஒன்றையே
புதிதாகப் படைத்துப்பார்த்தேனே!-அங்கு

சத்தியக் கனவுகள்
தானன்றி வேறில்லை
சதிகாரர் கூட்டங்களில்லை.
எத்தர்கள் இல்லை.
ஏய்ப்பவர் இல்லை.
ஏமாறு கின்றவருமில்லை. அதனால்

தத்துவக் கூச்சல்களில்லை-தத்தம்
தனித்துவம் மறந்தவருமில்லை.
ஒருகட்சி ஒருஇனம்
ஒருநாடு என்ற
சமுதாய நெறியொன்று
தழைத்திடல் கண்டேன்! இவை

கனவாகி நீள்வதைக்
காலங்கள் வெல்லும்! அதை
கதைகளாய் நாளைய
கவிதைகள் சொல்லும்!



உ

# மீண்டும் ஒருமுறை உங்களுடன்

தமிழ் இலக்கியங்கள் நன்கு தழைக்க வேண்டுமென்று எண்ணத்தால் உயர்கொள் இனிய நெஞ்சங்களுக்கென் அன்பு வணக்கங்கள் ஆயிரம்!

"பிள்ளைப்பா பூக்கள்" என்றவென் முதல்நூலில் பிள்ளைத் தமிழில் உங்களோடு பேசிக்கொண்ட நான் - கொஞ்சம் கனத்த சிந்தனைகளையே கருவூலங்களாக்கிய இந்தக் கவிதை "வடிவங்கள்" மூலமாக மீண்டுமொருமுறை கலந்துகொள்ள வந்திருக்கிறேன்.

அச்சேற்றப்பட்ட பிள்ளைப்பா பிரதிகள் அனைத்தும் ஐந்து மாதத்திற்குள்ளாக விற்றுத் தீரும் வண்ணம் தங்கள் பேராதரவை வழங்கிய அனைவருக்கும்- கடிதங்களிலும் - நேரிலும் தொலைபேசியிலுமாக அந்நூல்பற்றி கருத்துக்கள் பகிர்ந்து பாராட்டுத் தெரிவித்த அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும் என் அன்புகலந்த நன்றிகளைக் கூறி:

இந்தவென் இரண்டாவது நூலுக்கும் உங்கள் இனிய இதயங்களால் ஆதரவு தருவீர்கள் என்ற அசையாத நம்பிக்கைகொண்டு.

அன்புடன் - ந. தருமலிங்கன்

Printed by: Luxmi Printer-195, Wolfendhal Street, Col-13. Tel: 448545, 458273